# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

## Calender Case No.01 of 2024

**Deposition of witness for** : **Pw14**

**Name** : **மருத்துவர் திரு. சோமசுந்தரம்**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தடிக்கல் அரசு உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். 06.05.2022 ம் தேதி நான் காவேரி பட்டிணம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி புரிந்து வரும்போது அன்று மதியம் 1.45 மணி அளவில் முனியம்மாள் வயது 41 க/பெ திருப்பதி, வேலம்பட்டி பகுதியை சார்ந்தவர். சிகிச்சைக்காக வந்திருந்தார். அவர் தன்னைஅன்றைய தினமே 12 மணி அளவில் வேலம்பட்டி ஒயின் சாப் அருகில் தன்னை 2 ஆண்கள் ஒரு பெண் தன்னை இரும்பு ராடால் உடல் முழுவதும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது தனக்கு முதுகு வலி இருப்பதாக கூறினார். அவருக்கு வெளிப்புற காயம் ஏதும் இல்லை அதனால் புற நோயாளியாக சிகிச்சை

அளிக்கப்பட்டார். அன்றைய தினமே மதியம் 2.10 மணி அளவில் காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனையில் சுமார் 5 முதல் 10 பெண்களும், சுமார் 5 முதல் 10 ஆண்களும் அவரை கைகலால் தாக்கினார்கள். அப்போது அவருக்கு வலது கண்ணில் eye ball Injury ஏற்பட்டது. கண்ணில் பார்வை தெரியவில்லை என கூறினார். எனவே அவரை மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கண் சிகிச்சை பிரிவுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் அவர் அரவிந்த் கண் மருத்துவமனை கோவை யில் 07.05.2022 முதல் 10.05.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். அங்கு அளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வலது கண் Open globe injury இதனால் அவரது வலது கண்ணில் பார்வை திறன் 1/2 / 60 என்றும் இடது கண்ணில் 6/12 அளவிலும் இருந்தது. இதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே அதே சமயத்தில் ராஜேஸ்வரி வயது 36 க/பெ கருணாநிதி வேலம்பட்டி என்பவரை அவரது உறவினர் சிவா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அன்றைய தினமே 12 மணி அளவில் வேலம்பட்டி ஒயின் சாப் அருகில் 3 பெண்கள் ஒரு ஆண் தன்னை மரக்கட்டையால் உடல் முழுவதும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தில் வெளி புற காயம் ஏதும் காணப்படவில்லை. உடல் வலி உள்ளதாக கூறினார். அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கினேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே கருணாநிதி வயது 55 த/பெ திருப்பதி வேலம்பட்டியை சார்ந்தவர். அன்று தன்னை 12 மணி அளவில் தன் வீட்டில் 3 ஆண்கள் 3 பெண்கள் தன்னை இரும்பு ராடு கொண்டு உடல் முழுவதும் தாக்கியதாக கூறினார். அவர் தனக்கு உடல் வலி மற்றும் முதுகு வலி இருப்பதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் வெளிப்புற காயம் ஏதும் காணப்படவில்லை. அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கினேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே ராணி வயது 30 க/பெ மாது, வேலம்பட்டியை சார்ந்தவர். அவருடைய சகோதரர் பழனி என்பவருடன் சிகிச்சைக்காக வந்தார். அவரை அன்றைய தினம் 12 மணி அளவில் வேலம்பட்டி ஒயின் சாப் அருகில் தன்னை 3 பெண்கள் ஒரு ஆண் தன்னை மரக்கட்டையால் உடல் முழுவதும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தில் வெளி புற

காயம் ஏதும் காணப்படவில்லை. முதுகு வலி மற்றும் உடல் வலி உள்ளதாக கூறினார். அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். மேல்சிகிச்சைக்காக அரசு கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு எலும்பியல் நிபுணர் கருத்துரைக்காக அனுப்பட்டார் . மேலும் சிகிச்சை செய்த விவரம் பற்றி தெரிவிக்காத காரணத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கினேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ராணி , ராஜேஸ்வரி , முனியம்மாள் ஆகியோர் தன்னை வேலம்பட்டி ஒயின் சாப் அருகே தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். கருணாநிதி மற்றும் வீட்டில் தாக்கியதாக குறிப்பிட்டார். ராணி , ராஜேஸ்வரி மற்றும் கருணாநிதி ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் தள்ளு முள்ளு ஏற்படும்போது கீழே விழும்போது ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். முனியம்மாள் முதலில் சிகிச்சைக்காக வரும்போது தனக்கு கண் வலி இருப்பதாக சொன்னார் என்றால் சரியல்ல. காவேரிபட்டிணம் மருத்துவமனைக்கு அருகில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். முனியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் கூர்மையான பகுதியில் கீழே விழும்போது ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஆனால் அங்குஅவ்வாறு ஏற்படவில்லை. நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அப்போது பணியில் இருந்தேன். மேற்படி முனியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் உரிய சிகிச்சை அளித்தால் சரியாகுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் அது குறித்து கண் மருத்துவ நிபுணருக்கு தான் தெரியும். கூட்டத்தில் ஒருவருக்கு தகராறு ஏற்படும்போது கண்ணில் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.